**நாரம்மல பிரதேச சபையின் - 2022**

**-------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாரம்மல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நாரம்மலபிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பெறுமதி ரூபா 230,314 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது அதனை சரிசெசய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குவைத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் கடன்கொடுத்தோர் ரூபா 1,225,991 ஆலும் கைத்தொழில் கடன்பட்டோர் ரூபா 584,356 ஆலும் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் பட்டோலைகளைகளின் பிரகாரமான பெறுமதிக்குமிடையே மொத்தமாக ரூபா 2,597,066 விதியாசமாகும். | 2023 ஆம் ஆண்டில் அதனை சரியாக நாளதுவரையாக்குவதற்கு விடய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும்.. |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **பிரதேச சபையின் நிதி மற்றும் நிருவாக விதிக் கோவை** | | | | |
| (i) | விதி 61 | வணிக அனுமதிப்பத்திரம், வியாபார வரி, தொழில்சார் வரி என்பன தொடர்பாக ஆண்டின் தொடக்கத்தில் மீளாய்வுசெய்து ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஏடுகளை சரியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 218 | தலைவரினால் நியமிக்கப்பட்ட ஒரு சபையினால் வருடாந்தம் காணி கட்டிடங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் முறைப்படி மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 23,131,722 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 23,636,609 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமான ம் | திசெம்பர் 31 இல் உள்ளவா றான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமா னம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமான ம | திசெம்பர் 31 இல் உள்ளவா றான மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. ii. | வீத வரியும் வரியும் | 12,796 | 17,790 | 12,159 | 5,631 | 12,513 | 12,590 | 12,484 | 2,806 |
| iii. | வாடகை | 26,457 | 24,774 | 24,032 | 742 | 25,902 | 21,915 | 20,844 | 1,071 |
| iv. | அனுமதிப்பத் திர கட்டணம் | 1,163 | 1,852 | 1,852 | - | 1,163 | 1,100 | 1,100 | - |
| v. | ஏனைய வருமானம் | 31,296 | 74,513 | 44,663 | 29,850 | 12,590 | 43,369 | 16,553 | 26,816 |
| | | 65,390 | 72,946 | 67,502 | 5,444 | 65,588 | 62,803 | 58,467 | 4,336 |
| | | -------- | ---------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| மொத்தம் | | 137,102 | 191,875 | 150,208 | 41,667 | 117,756 | 141,777 | 109,448 | 35,029 |
| | | ===== | ====== | ===== | ===== | ====== | ===== | ===== | ===== |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| நிலுவையான வீதவரி மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 673,332 தொகையும் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 151,133 தொகையும் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வரிப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான வீதவரிப்பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 78,641 தொகையான நிலுவை ஏக்கர் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான ஏக்கர்வரி பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையான ஏக்கர் வரியினை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டி இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 5,850,164 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 24,000,000 ஆகும். | 2023 ஆம் ஆண்டிற்குள் அப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத்தின் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) வீதவிரி மதிப்பீடானது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் வீதவரி மதிப்பீடானது 2015 ஆம் ஆண்டின் போதே கடைசியாக மேற்கொள்ளப்பட்டது. | 2011 ஆம் ஆண்டில் கடைசியாக முன்னேற்றமடைந்த கிராம பிரதேசங்கள் வர்த்தமானியில் வெளிடப்பட்டதுடன் நாட்டிற்குள் காணப்படும் நிலைமை வழக்கமான நிலைமைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் முன்னேற்றகரமான பிரதேசங்கள் வெளியிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விளையாட்டு மைதானங்களுக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த 10 வகையான விளையாட்டு பொருட்களினதும் கதிரை மேசைகளினதும் மற்றும் முன்பள்ளிகளுக்கு நன்கொடையாகக் கிடைத்த 06 பொருட்களினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு முடியாதுள்ளது எனவும் 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் புதிய சபைக் கட்டிடம் மற்றும் இரண்டு காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 3.2. செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நாரம்மல கிவுல்கல்ல குடிநீர் செயற்திட்டத்திற்காக உரிய செயற்திட்டத்தினை மேற்கொண்ட சமூக அமைப்பிற்கு 2022 ஆம் ஆண்டில் பிடித்துவைத்தல் பணம் விடுவிக்கப்பட்டதுடன் மீண்டும் 2022 ஆம் ஆண்டில் அந்த செயற்திட்டத்திற்காக சபையினால் ரூபா 1,982,504 செலவு செய்யப்பட்டிருந்தும் சமூகத்திற்கு குடிநீரை வழங்காது செயற்திட்டம் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. | குடிநீர் செயற்திட்டத்திற்காக நீர்க் குழாய்களை பதிக்கும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தும் நீர் மீற்றர் பொருத்தப்பட்டிருக்காததன ால் செயற்படும் நிலையில் இல்லாததுடன் தற்பொழுது நீர் மீற்றர்கள் வழங்கப்பட்டு குடிநீரினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு வருகின்றது. | குடிநீரை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்

**ஊழியர் கடன்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சேவையை கைவிட்டுச் சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,450 தொகையும் ஓய்வுபெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 264,571 தொகையும் அறவிடப்படாது காணப்பட்டது. | உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 காணிகளையும் ஒரு மயானத்தையும் சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சபையின் சொத்துக்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து பொதுச்சந்தை கட்டிடத் தொகுதியில் 04 ஆம் இலக்க மீன்கடை பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் நான்கு தடவைகள் கேள்வி கோரப்பட்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு எவரும் முன்வந்திருக்கவில்லை. | குத்தகை ஆதனங்களிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 11 செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவுக்குமிடையே 32 சதவீத்திலிருந்து 96.7 சதவீதம் வரையான முரண்களும் 04 வருமான விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 53 சதவீத்திலிருந்து 100 சதவீதம் வரையான பொருண்மையான முரண்கள் காணப்பட்டதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்:துவ கட்டப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சரியாக கணிப்பிட்டு பாதீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் வருமானங்கள் மற்றும் செலவுகள் சம்பந்தமாக முன்னறிதலினை மேற்கொண்டு பாதீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |